மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
பல்லாவரம்

அ.வ.எண்.403/2023
Old No. 202 /2016
PW.1

பெயர்: பிரமிளா த.பெ.நமச்சிவாயம் நாள் : 12.09.2023

**குறுக்கு விசாரணை.**

என் தகப்பனார் நமச்சிவாயம் என்பவர் உயிருடன் இல்லை. என் தாயார் பெயர் ஆலிஸ் என்பவர் உயிருடன் இல்லை. 1 முதல் 4 வாதிகள் எனது சகோதர சகோதரிகள் ஆவார்கள். இவ்வழக்கினை வாதிகள் எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியும். இவ்வழக்கு சொத்து ஆதியில் அரசு புறம்போக்கு நிலமாகும் என்றால் ஆம்.

வழக்கு சொத்தில் நான் மற்றும் வாதிகள் அனைவரும் சேர்ந்து வசித்து வந்தோமா என்றால் இல்லை. வழக்கு சொத்து ஆதியில் அரசு புறம்போக்கு நிலமாக இருந்ததை வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா நிலமாக நிர்ணயிக்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆம். ஆதியில் பட்டா யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் தவறுதலாக வழங்கப்பட்டது. பெயர் தெரியாது.

வழக்கு சொத்திற்கான பட்டாவானது என் தகப்பனார் மற்றும் எனது 3 சகோதரர்கள் பெயரில் வழங்கப்பட்டது என்றால் இல்லை. அது அம்மாவின் சொத்தாகும். ஆதியில் தகப்பனார் மற்றும் சகோதரர்கள் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை பின்பு என் பெயரில் மாற்றம் செய்து கொண்டேன் என்றால் இல்லை. என் பெயரில் தான் வழங்கப்பட்டது. வட்டாட்சியர் அலுவலகத்தில் வழக்கு சொத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பட்டாவை மாற்றம் செய்து என் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. எனது பெயரில் பட்டா வழங்கப்படவில்லையா என்றால் வழங்கப்பட்டது.

எனது பெயரில் பட்டா மாற்றம் செய்ததற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து விசாரணை நடத்தப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2-ம் வாதி வட்டாட்சியர் அலுவலகத்தில் என் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை எதிர்த்து மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆம். மேற்படி மனுவினை எதிர்த்து 2-ம் வாதி மாண்புமிகு

சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆம். அதனை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி உத்தரவானது வா.சா.ஆ. 11 ஆகும் (சாட்சியிடம் காண்பிக்கப்பட்டுள்ளது) என்றால் ஆம். மேற்படி நீதிப்பேராணை மனுவில் நானும் ஒரு தரப்பினர் ஆவேன். நான் வழக்கறிஞர் வைத்து அதில் ஆஜர் ஆனேன் என்றால் இல்லை.

வா.சா.ஆ.11 மூலம் வழக்கு சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டாவில் திருத்தம் செய்தது தவறு என்றும் மீண்டும் மறு விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. அதன் பெயரில் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் என்னை அழைத்து விசாரணை செய்துள்ளார் என்றால் இல்லை. நான் கூறுவது தவறு என்றும் வட்டாட்சியர் எங்கள் அனைவரையும் அழைத்து விசாரணை செய்து வா.சா.ஆ.3 மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆம். அதனை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளோம். மேற்படி வா.சா.ஆ.3 உத்தரவானது 31.07.2015–தேதியில் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆம்.

வா.சா.ஆ.3 மூலம் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவானது அனைத்து தரப்பினர்களையும் அழைத்து முழுமையாக விசாரணை செய்து அனைவரது ஆட்சேபணைகளை பதிவு செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் வழக்கு சொத்திற்கு வந்து நேரடியாக பார்வையிட்டு உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் இல்லை.

இவ்வழக்கில் நான் எனது தாயார் எனக்கு வழக்கு சொத்தை தான செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார் என்ற அடிப்படையில் உரிமை கோரியுள்ளேன். வா.சா.ஆ.3–ன் உத்தரவில் எனது தாயாருக்கே வழக்கு சொத்தில் உரிமை இல்லை என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அம்மாவிற்குத்தான் முழு உரிமை உள்ளது. அதனடிப்படையில் வழக்கு சொத்திற்கு என் பெயரில் மாற்றம் செய்துள்ள பட்டாவை வா.சா.ஆ.3 உத்தரவில் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை.

வா.சா.ஆ.3 மூலம் வழக்கு சொத்திற்கான முதலில் இருந்து பட்டா தான் செல்லும் என்று புதுப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 மூலம் எனக்கும் எனது சகோதரர்களான வாதிகளுக்கும் வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்று உத்தரவு

பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. அதன் அடிப்படையில் வா.சா.ஆ.4 வழங்கப்பட்டுள்ளது என்றால் தவறாக வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக அனைவரின் பெயரில் தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. அந்த பட்டா எண். 1912 ஆகும் என்றால் தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.3 உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு ஏதும் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆம். அதன் விவரங்கள் கூற இயலுமா வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞருக்குத்தான் தெரியும். நான்கூறுவது தவறு என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகியும் அவ்வாறு எனது தரப்பில் எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி பட்டா இறுதியாக பதிவு செய்யப்பட்டு கணினியில் செலுத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வா.சா.ஆ.1 மூலம் வழக்கு சொத்திற்கு உரிமை கோரியுள்ளேன் என்றால் ஆம். வா.சா.ஆ.1–ல் எனது தாயாருக்கு எவ்வாறு சொத்து வந்தடைந்தது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அவர் அனுபவத்தில் இருந்த உழைப்பில் இருந்த சொத்தை எனக்கு எழுதி வைத்துள்ளார். எனது தாயாருக்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்பதற்கு எந்த வருவாய் துறை ஆவணங்களும் வரி ரசீதுகளும் இல்லை என்றால் சரியல்ல. உள்ளது.

எனது தாயார் பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். நான் கூறுவது போல் எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.